# யாழ்ப்பாணக் குடாநாட்டில் 19ஆம் நூற்றாண்டில் நிலவிய பாரம்பரியக் கல்விமுறை

எஸ். சிவலிங்கராஜா

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய பாரம்பரியக் கல்விமுறையென்னும்பொழுது 19ஆம் நூற்றாண்டில் நிலவிய மரபுவழிக் கல்விபற்றியே இங்கு ஆராயப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரம்பரை பரம்பரையாக மரபுவழிக் கல்விமுறை தொடர்ந்து வந்தமைக்குரிய சான்றுகள் பல காணப்படுகின்றன. ஐரோப்பியர் வருகையையொட்டி நிறுவனரீதியிலான கல்விப்பரம்பல் தொடங்குவதற்கு முன்னரே குடாநாட்டில் அங்குமிங்குமாகப் பல திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றுள்ளன. நாம் இங்கு பாரம்பரியக் கல்விமுறையெனக் குறிப்பிடுவது திண்ணைப் பள்ளிக்கூடங்களில் நடைபெற்ற மரபுவழிக் கல்வியையே.

யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலிருந்து இக்கல்விமரபு பரந்திருந்தமையை அறிய முடிகின்றது. யாழ்ப்பாண மன்னர்களின் பின் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களிலும் இப்பாரம்பரியக் கல்விமுறை பரவலாகக் காணப்பட்டிருக்கின்றது. இக்கட்டுரைத் தலைப்பு ஆங்கிலேயர் காலப்பகுதியையொட்டி அமைவதாலும் அக்காலப் பகுதியில் குடாநாடெங்கணும் பரந்திருந்த கல்வி மரபினை அறிய ஆதாரபூர்வமான சான்றுகள் கிடைப்பதாலும் சிறப்பாகப் பிரித்தானியர் காலத்துப் பாரம்பரியக் கல்விமரபினையே ஆராய்கிறோம்.

19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணக் குடாநாடெங்கணும் பரவலாகத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் காணப்பட்டன. பெரும்பாலும் ஒவ்வொரு ஊர்களிலும் மேற்குறிப்பிட்ட கல்விமரபு சிறிதும், பெரிதுமாய் வளர்ந்து வந்திருக்கின்றது. ஆய்வு வசதி கருதியும், குடாநாட்டின் பாரம்பரியக் கல்வி முறையை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தி அறுத்தொடர்ச்சியுடன் ஒரு புதிய கல்விமரபினைத் தோற்றுவித்துள்ளன என்ற நம்பிக்கையிலும், நல்லூர், உடுப்பிட்டி, புலோலி என்ற மூன்று பாரம்பரியக் கிராமங்களையே சிறப்பாகத் தெரிவு செய்துள்ளேன். இம்மூன்று கிராமங்களும் குடாநாட்டின் பாரம்பரியக் கல்விமுறைக்கு வகைமாதிரியாகத் திகழ்கின்றபோதிலும், பொதுவான ஓட்டத்திலிருந்து விடுபட்டுச் சில சிறப்பான தன்மைகளையும் கொண்டிருக்கின்றன.

குடாநாட்டில் இம்மூன்று கிராமங்களையுந்தவிர, வேலணை, அராலி, அச்சுவேலி, காரைநகர், வரணி, சுன்னாகம், தெல்லிப்பளை, கோப்பாய், மட்டுவில், விளைவேலி முதலிய இடங்களிலும் குறிப்பிடக்கூடிய பாரம்பரியக்கல்விமுறை நிலவிவந்துள்ளது.

இருபாலை, வண்ணார்பண்ணை என்ற இரு கிராமங்களையும் சேர்த்தே நல்லூர் என்று குறிப்பிட்டிருக்கின்றேன்.

உடுப்பிட்டி எனும்போது தற்போது வடமராட்சியின் பெரும் பகுதியை அடக்கியுள்ள உடுப்பிட்டித் தேர்தற் தொகுதியைக் கருதாது பாரம்பரியக் கிராமமான உடுப்பிட்டியையே குறிப்பிட்டுள்ளேன்.

தம்பசட்டி, தும்பளை ஆகிய கிராமங்களையும் இணைத்தே புலோலி என்று குறிப்பிட்டுள்ளேன்.

இம்மூன்று இடங்களிலும் நிலவிய கல்விப் பாரம்பரியத்தை ஆராயும் பொழுது அவை யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய பல பகுதிக்கும் பொருந்தி இருப்பதை அவதானிக்க முடிந்தது. பாரம்பரியக் கல்வி மரபினையும் அக்கல்வி மரபிலிருந்து முகிழ்த்த அறிஞர்களையும் பற்றி ஆராயும் பொழுது பல அறிஞர்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள் என்ற உண்மையையும் அறியமுடிந்தது.

இப்பாரம்பரியத்தில் பெரும்பாலும் கல்வி பரம்பரைச் சொத்தாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அக்காலத்தில் புலமைபெற்று விளங்கியவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கும்பொழுது இந்த உண்மை புலனாகின்றது. வாய்ப்பும் வசதியும் உள்ள உயர் சாதிக்காரர்களுக்குக் கல்விவசதி சிறப்பாகக் கிடைத்திருக்கின்றது. புலமைபெற்று விளங்கியவர்கள் கல்வி கற்ற மரபினைக் கவனிக்கும்பொழுது, தகப்பனிடமோ, அல்லது மாமன், பேரன், பெரியதந்தையார் போன்ற உறவினரிடமோதான் அவர்கள் தம் ஆரம்பக் கல்வியைப் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. கல்வியும் ''குலவித்தையாகவே'' கருதப்பட்டு வந்துள்ளது. ''மருகரும் மாணவரும்'' என்னும் மரபு இப்பாரம்பரியத்தின் பலத்தையே சுட்டுகின்றது. அக்காலத்தில் கல்வியின் ஆரம்பம் முறைப்படி ஏடுதொடக்கப்பட்ட சடங்காசாரத்துடனேயே அமைந்திருந்தது. கோயிற்பூசகர் அல்லது ஆசிரியர் அல்லது படித்த உறவினரொருவர் விஜயதசமி நாளன்று பூரண கும்பம் வைத்து மங்களகரமாக ஏடு தொடக்கல் என்னும் சடங்கினை நிகழ்த்துவார். சிறப்பாக அம்பாள் கோயில்களிலேயே ஏடு தொடக்கல் என்னும் சடங்கு நிகழும்.

இக்கல்வி மரபில் பரம்பரை கணிசமான அளவு ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது.

> (இவர் வாழையடி வாழையாகப் பிதா, பாட்டன், அப்பாட்டன், முப்பாட்டன் என மூன்று நான்கு தலைமுறைகளான வித்துவான்களின் வமிசத்தைச் சேர்ந்தவர்...... இவரது பிதாவிடத்தில் இராமாயணப் பொருள் கேட்டதற்குக் கைமாறாகவே சேனாதிராயமுதலியார் அதி கரிசனையோடு இவர்க்குக் கல்வியமுதூட்டினர்.)

இவ்வாறு சண்முகச் சட்டம்பியாரின் வரலாற்றைப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் குறிப்பிடுவர். இக்குறிப்பு கல்விக்கும் குடும்ப நிலைப்பட்ட உறவுக்குமுள்ள தொடர்பினைத் தெளிவாக்குகிறது.

இப்பாரம்பரியத்தில் ''கல்வி உபகாரம்'' என்ற தொடரினைப் பரவலாகக் காணமுடிகின்றது. இம்மரபில் கல்வி 'உபகாரப்' பண்டமாகக்

கருதப்பட்டமையுமுண்டு. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் கல்வி உபகாரத்தை மாணவர்கள் பெற்றனர். சாதி, சமூக, பொருளாதார அமைப்புக்கள் இப்பாரம்பரியத்தில் பலமான பங்கினை வகித்தன. கல்வியும், புலமையும் இவ்வமைப்புக்களுக்கேற்ப 'ஏறியும் இறங்கியுமே' காணப்பட்டன எனலாம். உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் திண்ணைப்பள்ளியில் சாதியமைப்புப் பெருமளவு பேணப்படவில்லை யென்பர். இவர்பற்றியும், இவர் திண்ணைப்பள்ளி பற்றியும் பல செவிவழிக் கதைகள் உள்ளன.

இப்பாரம்பரியத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களின் அமைப்பையும், ஆசிரியமாணவர் உறவையும் கவனிக்கும்பொழுது பள்ளிக்கூடம் ஆசிரியரின் வீட்டிலோ, அல்லது அவ்வூர்ப் பெரியவரின் வீட்டிலோதான் (அவர் ஆசிரியருக்கு உறவினராக இருப்பார்) நடைபெறும். ஆசிரியர் தனியாக அமைந்த திண்ணையில் மான்தோலில் அல்லது பலகையில் அல்லது பாயில் அமர்ந்திருப்பார். சூழவுள்ள திண்ணைகளில் பாய் போடப்பட்டிருக்கும். மாணவர்கள் வரிசையாக இருப்பர். ஆசிரியர் பாடம் நடத்துவார். பெரும்பான்மையும் ஆரம்பவகுப்புக்களில் உள்ளவர்களுக்கே காலையில் வகுப்புக்கள் நடக்கும். மாலையில், இரவில் இலக்கண இலக்கியம் கற்கும் (உயர்கல்வி) பெரியமாணவர்களுக்குப் பாடம் நடக்கும். அக்காலமரபில் இத்தகைய வகுப்புக்களை இராப்பள்ளி, நிலாப்பள்ளி என்றும் அழைத்தனர். இத்தகைய பள்ளிகளில் வயதுவந்தவர்கள் பலர் கலந்து "புராண படனம்" பழகுவதும் உண்டு. உரைபழகுவோர் என்ற ஒரு வகையில் இவர்கள் கணிக்கப்பட்டனர். இலக்கண இலக்கியங்களைக் கற்காமல் தனியே "உரை பழகி"ப் புராணபடனம் செய்தவர்களையும் (குறிப்பாகக் கந்தபுராணம்) இம் மரபினூடு காணலாம்.

ஆசிரியர்களின் வீட்டுவேலைகளைப் பெரும்பாலும் மாணவர்களே செய்வர். இது மாணவரின் கடமையாகக் கணிக்கப்பட்டுவந்தது. மாணவர்களின் வயது வித்தியாசத்தைவிட (அறிவு) திறமைக்கேற்பவே வகுப்புக்கள் நடைபெறும். மாணவர்கள் ஆசிரியரின் வீட்டிலே தங்கி இருந்து பாடம் கேட்பதும் உண்டு. மாணவர்கள் பெரும்பாலும் ஆசிரியருக்கு உறவினராகவோ அல்லது நண்பர்களின் பிள்ளைகளாகவோதான் இருப்பர். (இதிற் புறநடையும் இருந்தது) மாணவர்களை ஆசிரியர் தம் திண்ணைப் பள்ளியிற் படிக்க அனுமதிக்குமுன் சில வினாக்களைக் கேட்டு அவர்களின் திறமையை, நினைவாற்றலைப் பரீட்சிப்பது வழக்கம்.

> சிவன் கோயிற் குருக்களும் சிறந்த வடமொழி அறிஞருமாகிய மறைத்திரு பிச்சுவையரவர்களின் இல்லம். இவ் வீட்டுத் திண்ணை விசாலமானது. இத்திண்ணையிலேயே வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை சில மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லி வந்தார். அவ்வாறு பாடம் நடைபெறும் ஒரு சமயத்திலேயே கணேசையரவர்கள் தாமும் வித்துவசிரோமணியவர்களிடம் மாணவனாக இருந்து பாடங் கேட்பதற்கு அனுமதி பெறச் சென்றார்கள். ...... பக்கத்தில் நின்ற கணேசையரை நோக்கி "நீர் சொல்லுவீரா? என்று கேட்டார்கள். அதற்குக் கணேசையர் 'ஆம்' என்று கூறி .. ....

இவ்வாறு நிகழும் உரையாடல் அக்காலத் திண்ணைப்பள்ளி மரபில் மிகவும் சாதாரணமானது. முதல் உரையாடல் திருப்திகரமாக அமையா விடின் மாணவருக்கு அனுமதி கிடைப்பது கடினமாக இருக்கும்.

மேல்வகுப்பு மாணவர்களில் திறமையானவர்கள் கீழ்வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி போதிப்பர். இவர்களை மாணுக்க உபாத்தியாயர்கள் என்று அழைப்பது வழக்கம். உபாத்தியாயர் அல்லது சட்டம்பியார் என அழைக்கப்படுபவரே திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குப் பொறுப்பானவராக இருப்பார். அவரே பாடத்திட்டங்களையும் வகுத்துக் கொடுப்பவராவார். அவ்வவ்வாசிரியரின் விருப்பு வெறுப்பும் இப்பாடத்திட்டப் பகுப்பிலே தொழிற்பட்டமையையும் அவதானிக்க முடிகின்றது. அவரவர் அறிவுக்கேற்பப் பாடம் நடத்தப்படும். பாடநேரந் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் மாணவர்கள் தங்கள் சந்தேக விபரீதங்களை ஆசிரியரிடம் கேட்டுத் தெளிந்துகொள்வர்.

ஆசிரியர் மாணவர் உறவு நெருக்கமானதாக அமைந்த போதிலும், பணிவு, பயம், பக்தி உடையவர்களாகவே மாணவர்கள் விளங்கினர். மாணவர்கள் ஆசிரியர்களை அழைக்கும் சொற்கள்மூலம் இவற்றைத் தெரிந்து கொள்ளலாம். அக்காலத் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் கற்ற ஒரு முதியவர் ஆசிரியரிடமிருந்து விடைபெறும் பாடலைப் பாடிக்காட்டினார்.

* காலமே வந்தோ மையா
கருத்துடன் பாடந் தந்தோம்
சீலமாய் எழுதிக் கொண்டோம்
தேவரீர் மனத்திற் கேற்பக்
கோலமாய் நீறு பூசிக்
குழந்தைகள் பழஞ்சோ றுண்ணச்
சீலமாய் அனுப்பு மையா
தேவரீர் மனத்திற் கேற்ப.

தேவரீர், ஐயா என்பனபோன்ற சொற்பிரயோகங்களைக் கொண்டே, ஆசிரியர் மாணவர் உறவு எத்தன்மைத்து எனத் தெளிந்து கொள்ளலாம். ஆசிரியரைத் தேவரீர், ஐயா என்று அழைக்கும் அதேவேளையில் தம்மை, அடியேன், எளியேன் என்றே குறிப்பிடுவர். இம்மரபினைத் திண்ணைப் பள்ளியிலேயே காணமுடியும். ''ஒரு குருவுக்கும் பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணை'' எனும் தலைப்பில் முதலாம் பாலபாடத்தில் (நாவலர்) இடம் பெறும் பகுதி மாணவ ஆசிரியர் உறவினைப் படம்பிடித்துக் காட்டுவன போல் அமைந்துள்ளது.

திண்ணைப் பள்ளிக்கூடங்களின் முக்கிய நோக்கம் மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாகவும், இறைபக்தி உள்ளவர்களாகவும் ஆக்குவதோடு, இலக்கண இலக்கிய ரசனையும், எழுதவும், வாசிக்கவும் பயிற்றுதலாகவும்

* முதியவர் மயிலு முருகேசு 89 வயது (1977) இவர் மாணுக்க உபாத்தியாயராகக் கரவெட்டியிலிருந்த திண்ணைப்பள்ளியிற் படிப்பித்தவர். அவர் கூறியபடியே பாடல் எழுதப்பட்டுள்ளது.

பெருமளவு அமைந்தன எனலாம். செய்யுளியற்றுதல், செய்யுள்களுக்குப் பொருள்கூறுதல் (புராணபடனம் உட்பட) வைத்தியம், சோதிடம், என்பனவும் இம்மரபில் கவனிக்கப்பட்டது. பிள்ளைகளை நல்லவர்களாக்குவதற்குரிய நீதிநூல்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கணிதம், அளவை முதலியனவும் கற்பிக்கப்பட்டன. மாணவர்கள் பெரும்பாலும் ஓலைச்சுவடியிலேயே எழுதிப் படித்துவந்தனர். மிகச் சிறுபான்மையாகக் கடதாசி, புத்தக உபயோகங்களும் காணப்படுகின்றன.

பாரம்பரியக் கல்வியின் பாடத்திட்டத்தைப் பின்வரும் உதயதாரகைப் பத்திரிகைச் செய்திமூலம் தெளிவாக அறியலாம்.

> ... இப்பொழுது படிப்பிக்கும் தமிழ்க் கல்விகளாவன அரிவரி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருவள்ளுவர் குறள், நல்வழி, வாக்குண்டாம், நன்னெறி, நீதிவெண்பா, நாலடியார், சதுரகராதி வாழ்த்துமாலை, தொன்னூல்விளக்கப் புகழ்ச்சிமாலை, திருவள்ளுவமாலை, அந்தாதி, கணக்கு, நைடதம், சோதிடம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் நிகண்டு, அரும்பொருள் விளக்கம், இராவணசித்தர் சூத்திரம், காவியம், நன்னூல், வைத்திய சாஸ்திரம், ஆகமம் முதலானவைகளே.3

இப் பாடத்திட்டத்தைப் பார்க்கும்பொழுது நீதிநெறி போதிக்கும் நூல்களே அதிகமாக இடம்பெற்றுள்ளமை புலனாகின்றது. சிற்சில இடங்களில் சிற்சில பாடங்கள் சிறப்பாகவும் போதிக்கப்பட்டுள்ளன. அவை ஆசிரியரின் திறமைக்கும் நோக்கத்திற்குமேற்ப அமைந்திருந்தன. வரணி, கருணைவாய் முதலிய கிராமங்களில் யாப்பு, ஆகமம், சமஸ்கிருதம் போன்ற பாடங்கள் சிறப்பாகப் பயிற்றப்பட்டதாக அறியமுடிகின்றது.

திண்ணைப்பள்ளிக்கூட ஆசிரியர்களின் சமூக அந்தஸ்து உயர்ந்ததாகவே காணப்பட்டது. மாணவர்கள் மட்டுமன்றிப் பெற்றோரும் மதித்தே வந்துள்ளனர். கிராமமக்கள் ஆலோசனை பெறுதல், திதி, வாரம், நாள் முதலியவற்றை அறிதல் போன்றவற்றிற்கு ஆசிரியர்களையே நாடினர். வைத்தியம், சோதிடம் என்பவற்றிலும், சிறுபிணக்குக்களைச் சந்துசெய்வதிலும் பெரும்பாலான திண்ணைப்பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளமையையும் அறியமுடிகின்றது. சமூகப்பயன்பாடுடைய 'பெரியமனிதராகத்' திண்ணைப்பள்ளிக்கூட ஆசிரியர் விளங்கினர் எனலாம். சமய கரண நிகழ்வுகளிலும் ஆசிரியர்களுக்கு முதன்மையளிக்கப்பட்டுள்ளது. சரஸ்வதிபூஜை போன்ற கல்விசார்ந்த சடங்குகளை ஆசிரியர்களே முன்னின்று நடத்தினர். மாணவர்கள் இந்நிகழ்ச்சிகளிற் கலந்து ஆசிரியர்களுக்குக் 'குருதட்சணை' வழங்கி ஆசீர்வாதம் பெறுவது வழக்கம்.

திண்ணைப்பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு மாணவர்கள் வரன்முறையான வேதனம் வழங்குவதில்லை. பூரணை, அமாவாசை நாட்களில் ஏதோ இயன்ற பொருளை, சிலபண்டங்களை அன்பளிப்பாக வழங்குவர். ஆசிரியர்கள் அன்பளிப்புக்களை அவ்வளவு அதிகமாக எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. மாணவப்பருவம் தாண்டி உழைப்பிலீடுபட்டவர்களும் (பழைய மாணவர்களும்) விசேட நாட்களில் ஆசிரியர் வீட்டுக்குச் சென்று அன்பளிப்பாக

தம் உழைப்பின் பயனில் ஒருபகுதியைக் காணிக்கையாக வழங்குவர். இக் காணிக்கை மரபு பின் சமர்ப்பணம் என்ற வடிவம்பெற்றுத் தொழிற்பட்டமையும் அவதானிக்கப்பட வேண்டியது.

திண்ணைப்பள்ளி மாணவர்களுக்குப் பெரும்பாலும் பரீட்சையென்பது மனனத்தைச் சோதிப்பதுதான். அத்தோடு மனக்கணிதம், பொருள்கூறல், செய்யுளியற்றல் போன்ற பரீட்சைகளும் நடைபெறும். மாணவனுக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய உறவும் தொடர்பும் இருப்பதனால் மாணவனின் அறிவுவளர்ச்சியையும், புத்திசாதுரியத்தையும், அறியும் பல்வேறு சந்தர்ப்பங்கள் இயல்பாகவே ஆசிரியர்களுக்குக் கிடைத்துவிடும். இதனாற் பரீட்சையென்ற நோக்கத்தில் இக் கல்விப் பாரம்பரியம் அமையவில்லையெனலாம். இக் கல்விமரபினையும், அதன் பயன்பாட்டையும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை தனது வாழ்க்கைச் சம்பவமொன்றினைச் சித்திரித்தெழுதிய கட்டுரையினூடு தெளிவாகக் காணலாம்.

> "ஆரிய மொழிகளைத் தவிரத் தமிழ்மொழியில் எவ்வளவு படித்திருக்கிறாய் என்பது அவருடைய முதற்கேள்வி — அதற்கு யான் யாழ்ப்பாணத்தில் எனது ஆசிரியரிடம் பஞ்ச இலக்கணமும் படித்திருக்கிறேன். அவற்றை யான் ஒரு சோதனைக்கும் குறித்துப் படிக்காததினால் ஒருவேளை அவற்றில் நல்ல பயிற்சி இருக்காது. அன்றியும் என் தந்தையாரும் என் தமிழ்ப்படிப்பிலேயே கவனமெடுத்து வந்ததினால் சிறுவயது தொடக்கம் தமிழையே பெரும்பாலும் பயின்று வந்திருக்கிறேன்……… அவர் அதுதான் முறையான படிப்பு, நம்முன்னோரும் அப்படித்தான் படித்து வந்தனர் என்றார்.[4]

இக் கல்வி மரபில் பரீட்சை நோக்கமாக அமையாவிடினும் படித்தவற்றைத் திறமாகவும் சிறப்பாகவுமே படித்திருக்கின்றனர் என்பதற்கு ஆழ்ந்தகன்ற தமிழ்ப்புலமையுள்ள பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை உதாரணமாகிறார்.

திண்ணைப் பள்ளிக்கூடத்திற் படித்த மாணவர்களை ஒரு இடத்தில் 'கூட்டி' அவர்களைப் பரீட்சை செய்யும் வழக்கமும் 19 ஆம் நூற்றாண்டிலே காணப்படுகின்றது.

> "வேதக்குட்டிக் குருக்களையா, ஆறுமுகச் செட்டியார் மற்றுஞ்சில போதிய மனுஷர் ஒரு நாள் வண்ணார்பண்ணைக்குச் சேர்ந்த பிள்ளைகளை ஓரிடத்திற் சேர்த்து அவர்கள் படித்திருக்கும் படிப்புக்களில் சோதித்து நலமென்று கண்டபடியால் அப்பிள்ளைகளுக்குச் சில புத்தகங்கள் உபகாரம் பண்ணவென்று வாக்குப் பண்ணியிருக்கிறார்களென்று கேள்விப்படுகிறோம்.[5]

திண்ணைப் பள்ளிகளில் பெண்பிள்ளைகள் படித்தமைக்கான சான்றுகளைக் காணமுடியவில்லை. 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெண்கல்வி பெற்ற இடத்தைப் பின்வரும் குறிப்பிலிருந்து அறியலாம்.

> ''மிஷனரிமார் வந்த காலத்தில் படித்த ஆடவர் ஆங்காங்கு காணப்பட்டாலும் படித்த ஸ்திரிகளைக் காண்பது அரிதாம். ஆதி அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்தபொழுது (1816) யாழ்ப்பாண நாட்டில் பாடி நடனஞ்செய்யும் நாட்டியப் பெண்களைவிட இரண்டு சுதேசப் பெண்களுக்கு மாத்திரம் வாசிக்க, எழுதத் தெரியுமென்று அம்மிஷனரிமாருள் ஒருவர் எழுதியிருக்கிறார். அக்காலத்தில் பெண்பிள்ளைகள் படித்தல் மரபன்று எனக் கருதப்பட்டது.6

அக்காலச் சமூக அமைப்பில் பெண்கல்வி முக்கியம் பெறவில்லையென்பது நன்கு புலனாகின்றது. மரபுவழிக் கல்வியில் பாண்டித்தியம் பெற்ற பெண் பரம்பரையை முதன்முறையாகப் புலோலியிலேதான் காணமுடிகின்றது. இந்த வகையில் புலோலியின் கல்வி மரபுக்குத் தனித்துவமானதோர் சிறப்புண்டு எனக்கருதலாம்.

> பார்ப்பதி அம்மையாரைப் பாருச்சியென வழங்குவது வழக்கம். வான்மீகத்தைச் சமஸ்கிருதத்தில் வாசித்து விளக்கம் செய்யும் திறமை அந்த அம்மையாருக்கு இருந்தது. குறித்த குடும்பத்தில் இரு பெண்பிள்ளைகள் மிக இளம் பருவத்தில் மதுரைப்பண்டித பரீட்சையிற் சித்தியெய்த வைத்தவர் பார்ப்பதி அம்மையார். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களைக் கதை சொல்வதுபோற் கற்பித்து விடுவார் என்று கேள்வி.7

அக்காலத் திண்ணைப் பள்ளிக்கூட மரபினைப்பற்றி ஐரோப்பியர் கொண்டிருந்த கருத்துத் தனியே ஆராயப்படவேண்டியது. கிறிஸ்த்தவக் குருமார் தாம் தமிழ் மொழியைக் கற்பதற்குத் திண்ணைப்பள்ளிக் கூடங்கள் மூலம் பிரபல்யம் பெற்றிருந்த ஆசிரியர்களையே நாடினர். இதனால் குருமார் ஆசிரியர்களை மதித்துக் கனம்பண்ணி நடத்தினர் என்று அறிய முடிகின்றது.

மிஷனரிமாரின் கல்விப் பணியும் ஆரம்பகாலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களமைந்த சூழலிலேயே முதன்மை பெற்றன. குடாநாட்டின் பிரசித்திபெற்ற மிஷன் பாடசாலைகள் அமைந்திருக்கும் இடங்களை உற்று நோக்கும்போது இவ்வுண்மை புலனாகும். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி, பருத்தித்துறை காட்லிக்கல்லூரி தெல்லிப்பளை யூனியன்கல்லூரி முதலியன வகைமாதிரியாகச் சுட்டிக்காட்டக் கூடியவை.

> ...இருபாலைச் சேனாதிராய முதலியாரும், உடுப்பிட்டியில் அருளம்பல முதலியாரும், வண்ணார்பண்ணையிற் சிலரும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் தாபித்துத் தமிழ்க்கல்வியைப் பரப்பி வந்தனர். இம்முயற்சியினால் ஆங்காங்கு சிலர் தமிழ்க் கல்வியைக் கற்று வல்லவராய் விளங்கினாலும், தேசவிருத்திக்கும் நன்மைக்குமுரிய தமிழ்க்கல்வியைக் கற்பார் தொகை மிகச்சிறிதாய் இருந்தது8.

ஆரம்பகாலத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் சில நிறுவனரீதியான பாடசாலைகளாக மாறியும் உள்ளன. உடுப்பிட்டியிற் சாதாரண பள்ளியாக

இருந்த பள்ளியே முதலிற் தருமப்பாடசாலையாக மாறுகிறது. இந்த வகையில் நாமறிந்த வரையில் உடுப்பிட்டியே முன்மாதிரியாக அமைகிறது எனலாம்.

> வண்ணார்பண்ணைக் கந்தப்பகுமாரன் இராமலிங்கர் சிறிதுநாளைக்கு முன் வடமராட்சிக்குச் சேர்ந்த உடுப்பிட்டியிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்ற தருமப் பள்ளிக்கூடத்திற்கு வந்து அப் பள்ளிக்கூடத்து மாணவர்களைப் பரிசோதனைபண்ணி திருத்தணிகை கந்தப்பையர் குமாரராகிய விசாகப் பெருமாளையரும், களத்தூர் சுவாமிமுதலியார் குமாரன் வேதகிரி முதலியாரும் பிழையறப் பரிசோதித்து, உரைசெய்து அச்சிற் பதிப்பித்த இலக்கிய இலக்கணங்களையும், வேதாகமங்களையும், திருவள்ளுவர் குறள் முதலிய பல அறிவு நூல்களையும் மாணுக்கரது நன்மைக்காகப் பள்ளிக்கூடத்திலே வைத்து வழங்கும்படி கொடுத்ததுமன்றி சிலபல தரித்திரரான பிள்ளைகளுக்குத் தன்சொந்தச் செலவாக வஸ்திரவாகாரம் முதலிய கொடுத்துக் கல்வி படிப்பிக்கிறதற்கு ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.9

ஒரு கிராமத்தில் நிறுவப்பட்ட தருமப் பள்ளிக்கூடத்திற்கு இன்னொரு ஊரில் உள்ளவர்கள் (வடதேசம் உட்பட) வந்து பரீட்சை செய்து உபகாரம் செய்வதை முதன்முதலில் இங்கேதான் காண்கிறோம். இப்பாரம்பரியத்தில் திண்ணைப்பள்ளி மரபின் படிமுறை வளர்ச்சிப் போக்கினையே இத் தருமப்பள்ளிக்கூடம் எடுத்துக் காட்டுகின்றது.

இக்கல்விப் பாரம்பரியத்திற்கும் இலக்கிய முயற்சிகளுக்கும் இருந்த உறவு நெருக்கமானதாகவே காணப்படுகின்றது. கல்வி மரபுக்கேற்றவகையிலேயே இலக்கியங்கள் பொருளிலும், வடிவிலும் இயைவுபட்டுக் காணப்படுகின்றன. ஆக்க இலக்கியங்களாக, அந்தாதி, பதிகம், ஊஞ்சல் முதலிய இலக்கிய வடிவங்களுடன் நாடகஇலக்கியமும் சேர்ந்தே ஆக்கப்பட்டிருக்கின்றது. இலக்கண, இலக்கிய உரைகளும், இரசனைக் குறிப்புகளும் எழுதப்பட்டன. சோதிடம், வைத்தியம், அளவை, கணிதம் முதலிய துறைகளிலும் பேணலும் ஆக்கலும் நடைபெற்றிருக்கின்றன. பெரும்பான்மையாகச் சிலேடை, யமகம், மடக்கு, சித்திரக்கவி, கட்டளைக் கலித்துறை, விருத்தம், வெண்பா போன்ற யாப்புவடிவங்களும் இப்பாரம்பரியக் கல்வியினூடு முகிழ்த்தவையே யெனலாம்.

இக் கல்விமரபில் வந்தவர்களுக்கும், தமிழகத்திற்கும் இருந்த உறவு குறிப்பிடத்தக்கது. திண்ணைப்பள்ளிக்கூட ஆசிரியர்களிற் பலர் தமிழ்நாடு சென்று புகழ் நிறுவியவர்களாகவே காணப்படுகின்றனர். தமிழ்நாட்டில் வாழ்ந்தகாலத்தில் கற்றலிலும், கற்பித்தலிலும் ஈடுபட்டபலர் ஈழந் திரும்பியதும் நன்கு மதித்துப் பாராட்டப்பட்டனர் என்றும் அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்துத் திண்ணைப்பள்ளிகளிற் படித்துத் தென் இந்தியா சென்று புகழ் நிறுவியவர்களே எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படுகின்றனர். இக் காலகட்டத்தில் தமிழ்நாட்டிலும் இக்கல்விப் பாரம்பரியமே நிலவியது.

> ''பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் இருந்தன. திண்ணைப்பள்ளிக் கூடங்கள் என்னும் பெயரால் அவை

வழங்கப்படும். அங்கு நிகண்டு, நீதிநூல்கள், பிரபந்தங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன. கணிதத்திற்கு அடிப்படையான எண்சுவடி முதலிய வற்றையும் கற்பித்தனர்.10

குடாநாட்டின் கல்விப் பாரம்பரியம் கூழங்கைத் தம்பிரானிலிருந்து பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள் வரை ''மரபுப்பலம் கொண்டதாகவே காணப்படுகின்றது. மரபுவழியில் வரன்முறையான தமிழ்க் கல்வியைப் பெற்றவர்கள் நிறுவன அடிப்படையில் அறிமுகஞ் செய்யப்பட்ட ஆங் கிலத்தை மிக இலகுவாகக் கற்று ஆங்கில மொழியிலும் பாண்டித்தியம் பெற்றுள்ளனர். இம்மரபில் ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்றோர் விதந்தோதத்தக்கவர்கள்.

''யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் தமிழ்ப்புலமை சிறந்து விளங்கிய தற்குக் காரணம் குருசீடமரபில் வந்த கல்விமுறையாகும்'' என்று சு. நடேச பிள்ளை குறிப்பிடுவது பாரம்பரியக் கல்வியின் உள்ளுரத்தை உணர்த்துவ தாகக் காணப்படுகின்றது.

நல்லூர். உடுப்பிட்டி, புலோலி ஆகிய கிராமங்கள் குடாநாடு முழுவ தையும் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் சிறப்பான சிலஅம்சங்களை யும் கொண்டிருந்தன என்பதையும் அவதானிக்க முடிகின்றது.

நல்லூர், யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராகத் திகழ்ந்தமையும், சரஸ்வதிமகால் போன்ற நூல்நிலையத்து ஏடுகளும், கல்வியும் பரந்திருந்த மையாலும், வண்ணார்பண்ணைச் செட்டிகளின் செல்வாக்கு நல்லூரிற் செல்வு படியானமையாலும் நல்லூர் ஒரு தனித்துவத்தைப் பெற்று விளங்க வாய்ப்பாக அமைந்தது. இப்பகுதிப் புலவர்கள் ''அரசறிந்த'' புலவர்களா கத் திகழ்ந்தனர். குடாநாட்டின் சகலபகுதியினரும் ஏதோ ஒருவகையில் நல்லூர்க் கல்வி மரபின் பாதிப்புக்கு உட்பட்டவர்களே.

உடுப்பிட்டியில், திண்ணைப்பள்ளி நிறுவனரீதியான கல்விநிலையமாக மாற்றமடைந்தமையும், உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் மாணவர்கள் இலங்கையிலும் புகழ்பெற்று விளங்கியதாலும் பெருமளவு சிவசம்புப் புல வரின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சாதியமைப்பு பேணப்படாமையாலும் உடுப்பிட்டியும் முன்மாதிரியான கல்விமரபினையுடையதாகக் காணப்படு கின்றது எனலாம்.

புலோலி தமிழகத்துக்கு அண்மையில் இருப்பதால் புலமைத் தொடர் புகள் அவ்வக்காலங்களில் ஏற்பட்டு வந்திருக்கின்றன. ஐரோப்பியரின் முக்கிய உள்ளூர்த் துறைமுகமாகப் பருத்தித்துறை விளங்கியபோதும் வட மராட்சிப் பகுதியில் மிக அண்மைக் காலம்வரை பல தனித்துவத்தன்மை கள் பேணப்பட்டு வந்துள்ளன. நிறுவன ரீதியான கல்விநிலையங்கள் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் அதேவேளையில் அதற்குச் சமதையாக மிக அண்மைக் காலம்வரை புலோலியிற் திண்ணைக்கல்வி மரபு நின்று நிலைத் துள்ளது. பாரம்பரியக் கல்விபெற்ற பெண்மணிகளும் புலோலிப் பகுதியி லேயே வாழ்ந்திருக்கின்றனர். பல்கலைக்கழகங்களில் பழமைக்கும் புதுமைக்

கும் பாலம் சமைக்கும் கல்வி முறைகளை அறிமுகஞ் செய்த, விபுலானந் தரும், பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் இவ்வூர்ப் பாரம்பரியக் கல்வி முறையை அனுபவித்தவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தவகை யில் புலோலிக்குத் தனித்துவமானதோர் சிறப்புண்டு எனலாம்.

யாழ்ப்பாணக்குடாநாட்டின் பாரம்பரியக் கல்விமரபின் பொதுவான தன்மைகளை இம்மூன்று கிராமங்களும் கொண்டிருந்த போதினும் தனித்து வமும் சிறப்பும் பெற்று விளங்கின என்பதில் ஐயமில்லை. ஈழத்தின் இன் றைய புலமைவளத்திற்கும் கால்கோளாக அமைந்தது இப்பாரம்பரியமே யெனலாம்.

## சான்றுதாரம்

1. சதாசிவம்பிள்ளை ஆர்னெல்ட் எட்வேட், பாவலர் சரித்திரதீபகம்.

2. வித்துவான் நடராஜன், க. கி., மகாவித்துவான் மறைந்திரு சி. கணே சையர் நினைவுமலர், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன் றம் – 1960.

3. உதயதாரகை – 21–10–1841.

4. கணபதிப்பிள்ளை க. பேராசிரியர். தேசிகர் நினைவு – இளங்கதிர் 1949 1950, பேராதனைப் பல்கலைக்கழகம்.

5. உதயதாரகை – 16–09–1841 (பக் – 177)

6. வேலுப்பிள்ளை, க., மெஸ். யாழ்ப்பாண வைபவ கௌமுதி 1918.

7. புலோலியூர் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனுர் நூற்றூண்டுவிழா மலர் 1978. சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் உயர் தனப் பெருமை. பக் – 1

8. வேலுப்பிள்ளை, C. D. போதகர், அமெரிக்க இலங்கை மிஷன் சரித் திரம் – தெல்லிப்பளை, 1922.

9. உதயதாரகை – 17–6–1841.

10. சாமிநாதையர், உ. வே. டாக்டர், மீனுட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம்

11. நடேசபிள்ளை, சு., கணேசையர் நினைவு மலர். அணிந்துரை – 1960